www.manthiras.com

# ஸ்ரீ சக்ர ராஜ நாயகி

ஸ்ரீ சக்ர சாஜ ஸிம்ஹாஸனேச்வரி
ஸ்ரீ லலிதாம்விகையே புவனேச்வரி

ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோஹாரி
ஜ்ஞான வித்யேச்வரி ராஜராஜேச்வரி

பலவிதமாயுன்னை ஆடவும் பாடவும்
பாடிக்கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகம் முழுதும் என தகனுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சி காமேச்’வரி

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக் கூட்டி வைத்தாய்
நிழலெனத் தொடர்ந்த முன்னூழ்க் கொடுமையை
நீக்கச்செய்தாய் நித்ய கல்யாணி பவானி பத்ரேச்வரி

துன்பப் புடத்திலிட்டுத் தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்த உன் மாயம் நீக்கிப் பிறந்தப் பயனைத் தந்தாய்
அன்பைப்புகட்டி உந்தன் ஆடலைக்காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேச்வரி.